## 2.122 ஊராட்சி ஒன்றியங்களில் ஒரு கூடுதல் தட்டச்சர் பணியிடம் தோற்றுவிக்க மாவட்ட ஆட்சியர்களுக்கு அதிகாரம்

ஊரக வளர்ச்சி (இ4) துறை

அரசாணை (நிலை) எண். 186 நாள் : 10.6.1997

படிக்க :

1. அரசு கடித எண்.28484/பணி.அ/87–4, ப.ம.நி.சீ. நாள்.9.7.87.
2. ஊரக வளர்ச்சி இயக்குநரின் நேர்முக கடித எண்.22228/எ.ப்.1/97 நாள்.16.4.97.
3. அரசாணை நிலை எண்.180, ஊரக வளர்ச்சித் துறை, நாள்.9.6.1997.

**ஆணை**

ஒவ்வொரு ஊராட்சி ஒன்றிய பணியமைப்பின் கீழ் தற்போது ஒரு தட்டச்சர் பணியிடம் உள்ளது. ஊராட்சி ஒன்றியங்களில் இரண்டு வட்டார வளர்ச்சி அலுவலர்கள் இருந்தபோதிலும், தற்போது தட்டச்சர் பணியிடம் ஒன்றுதான் உள்ளது. பல ஆண்டுகளாக தட்டச்சு வேலை வெகுவாக கூடியுள்ளது. அரசு மாற்றியமைக்கக் தகுதியுள்ள ஒன்றிய அலுவலக அமைப்பில் தனியாக ஒரு தட்டச்சர் பணியிடம் ஏற்படுத்துவது அவசியம் என ஊரக வளர்ச்சி இயக்குநர் பரிந்துரைத்துள்ளார்.

2. மேற்கூறிய கோரிக்கையை அரசு நன்கு ஆய்வு செய்தது. அரசுப்பணியில் உள்ள ஒரு தட்டச்சர் தினமும் சராசரி, இருவரி இடைவெளியில் 30 பக்கங்கள் அல்லது ஒரு வரி இடைவெளியில் 15 பக்கங்கள் தட்டச்சு செய்ய அளவுகோல். அரசு படிக்கப்பட்டவை 1ல் குறிப்பிட்ட அரசு கடிதம் மூலம் நிர்ணயித்துள்ளது. அரசு நிர்ணயித்துள்ள அளவுகோலை ஊராட்சி ஒன்றியங்களுக்கும் பொருந்துமாறு ஆணையிட தற்போது அரசு முடிவெடுத்துள்ளது. அதனடிப்படையில், மேற்குறித்த அளவுகோலைவிட அதிக வேலைப்பளு உள்ள ஊராட்சி ஒன்றியங்களில், மேலும் கூடுதலாக தட்டச்சர் பணியிடங்கள் அரசு நிர்ணயிக்கப்பட்ட அளவுகோல்படி தேவைப்படும் இடங்களில், அந்தந்த மாவட்ட ஆட்சியர்கள், அதுபோன்ற ஊராட்சி ஒன்றியத்தில் ஒரு கூடுதல் தட்டச்சர் பணியிடம் ஏற்படுத்த அவர்களுக்கு அதிகாரம் வழங்கி, இக்கூடுதல் தட்டச்சர் பணியிடம் செலவினை அந்தந்த ஊராட்சி ஒன்றியமே மேற்கொள்ளவேண்டும் என குறிப்பிட்டு ஆணைப்பிறப்பிக்கலாம் எனவும் தற்போது அரசு முடிவெடுத்துள்ளது.

3. மேலே பத்தி 2ல் குறிப்பிட்ட அரசு தட்டச்சர் பணி குறித்து, படிக்கப்பட்டவை 1ல் குறிப்பிட்ட அரசு கடிதப்படி நிர்ணயிக்கப்பட்ட அளவுகோல், ஊராட்சி ஒன்றிய தட்டச்சர் பணியிடங்களுக்கும் பொருந்தும் என இதன் மூலம் அரசு ஆணையிடுகிறது. அவ்வாறு நிர்ணயிக்கப்படும் அளவுகோலைவிட, அதிக வேலைப்பளு உள்ள ஊராட்சி ஒன்றியங்களில், மேலும் கூடுதலாக தட்டச்சர் பணியிடங்கள் தேவைப்படும் இடங்களில் அந்தந்த மாவட்ட ஆட்சியர்கள், அதுபோன்ற ஊராட்சி ஒன்றிங்களில், கூடுதலாக மேலும் ஒரு தட்டச்சர் பணியிடம் மட்டும் ரூ.975–25–1050–30–1660 சம்பளவிகிதத்தில் ஏற்படுத்த, இதன் மூலம் மாவட்ட ஆட்சியர்களுக்கு அரசு அதிகாரம் வழங்குகிறது. இத்தட்டச்சர் பணியிடத்திற்கு சிறப்பு சம்பளமும் இதரபடிகளும் சேர்த்து வழங்கப்படும். இக்கூடுதல் தட்டச்சர் பணியிடச் செலவினை அந்தந்த ஊராட்சி ஒன்றியமே மேற்கொள்ள வேண்டும். ஒப்புதலை சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியத்திடமிருந்து பெற்று கூடுதல் தட்டச்சர் பணியிடம் ஏற்படுத்துவது பற்றிய உத்தரவினை மாவட்ட ஆட்சியர் பிறப்பிக்க வேண்டும். மாவட்ட ஆட்சியர் இது சம்பந்தமாக பிறப்பிக்கும் உத்தரவின் நகல்களை ஊரக வளர்ச்சி இயக்குநருக்கு அனுப்ப வேண்டும்.

4. ஏற்கனவே, ஊராட்சி ஒன்றியத்தில் பணிபுரியும் தட்டச்சர், இவ்வாணை மூலம் வழங்கப்படும் அதிகாரமளிப்பின்கீழ் நியமிக்கலாகும் தட்டச்சர் ஆகிய இருவரும் ஊராட்சி ஒன்றிய பணியமைப்பின் இரு பிரிவுகள் பணிகளையும் கவனிக்க வேண்டும்.

5. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.45790/97, நிதி(ஊ.வ.) நாள்.9.6.97 மூலம் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**எஸ்.நாராயண்**
அரசு செயலர்